ENC-3-TA

# இன்றைக்கு கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளிக்கும் ஊக்கம் - நிகழ்ச்சி 3

நீங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில் தேவன் உங்களை ஊக்குவிக்கும் அனுபவத்தை பெற விரும்புகிறீர்களா? பெரும்பாலானவர்கள் ஒவ்வொருநாளும் உலகத்தையே தங்கள் தோள்களில் சுமந்து நடப்பது போன்ற உணர்வுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை சோர்வடையவும் குழப்பமடையவும் செய்யும் பிரச்சனைகள் சூழ்ந்திருப்பதை உணர்கிறார்கள். அவர்கள் அதிகமாக கவலை படுகிறார்கள். வாழ்க்கையே கைமீறி போனது போல தோன்றுகிறது. இதன் விளைவாக, அவர்கள் தங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு கடினப்படுவதோடு சந்தோஷமாக இருப்பது அரிதானதாக காண்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வுதான் உங்களுக்கும் இருக்கிறதா? மற்றவர்களுக்கு பல சந்தேகங்கள் இருக்கலாம். உங்கள் கடந்த கால பாவங்களை தேவன் மன்னித்துவிட்டார் என்று உங்களுக்கு எப்படி நிச்சயமாக தெரியும்? அல்லது, நீங்களே கேட்டிடலாம், “ஜெயமுள்ள வாழ்க்கை வாழ்வதும் கிறிஸ்துவின் சந்தோஷத்தை அனுபவித்து ஒவ்வொரு நொடியும் சமாதானத்தோடு இருப்பது எப்படி?

ஜான் அன்கெர்பேர்கின் இந்த நிகழ்ச்சியில் நாங்கள் பதிலளிக்க இருக்கும் கேள்வி: “உங்கள் பாவங்களை தேவன் மன்னித்துவிட்டார் என்று எப்படி நிச்சயமாக சொல்லமுடியும்? எங்களோடு இணைந்துகொல்லும்படி உங்களை வரவேற்கிறோம்.

******

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வரவேற்கிறோம். நீங்க ஒரு கிறிஸ்தவராக இருந்தும் உங்களை வெட்கமடையவும் தேவ சமாதானத்தையும் இழக்க செய்திடும் பாவ பழக்கங்கள் உங்களில் இருந்தால் என்ன செய்வீர்கள்? வேதம் சொல்கிறது நீங்கள் பாவ பழக்கத்தை தகர்த்தெறிய வேண்டுமானால், முதலில், என்ன செய்யவேண்டும் தெரியுமா; முதலாவது, தேவ வாக்குத்தத்தமும் கிறிஸ்துவுக்குள் உங்கள் ஸ்தானமும்; இரண்டாவது, நீங்க தேவனுடைய உண்மையாய் உங்களுடைய பாவங்களாய் அறிக்கை செய்யவேண்டும்; மூன்றாவது, சாத்தனையும் சோதனைகளையும் எதிர்கொள்ள தேவன் அளித்திடும் ஆயுதங்களாய் பயன்படுத்தவேண்டும்.

இந்த காரியங்களை உங்களுக்கு சொல்வதற்காக, நான் சில தேவ மனிதர்களின் புத்தகங்களை பயன்படுத்துகிறேன் நீல் ஆண்டர்சன், எர்வின் லட்சர் மற்றும் சார்லஸ் ஸ்டேன்லி. அவர்கள் எழுதிய பிரபலமான புத்தகங்களை உங்களுக்கு பரிந்துரை செய்கிறேன். முதலில், நீல் ஆண்டர்சன் புத்தகங்கள், தி காமன் மேட் ஹோலி, தி பாண்டேஜ் பிரேக்கர், மற்றும் ரிலீஸ்ட் பிரம் பாண்டேஜ். இதெல்லாம் அருமையான புத்தகங்கள். அடுத்து, எர்வின் லட்சரின் புத்தகங்கள், மேட்டர்ஸ் ஆப் லைப் அண்ட் டெத்; கிறிஸ்தவர்கள் நிராகரிக்க முடியாத பத்து முக்கிய கேள்விகள், மற்றும் அவருடைய உப்பு மற்றும் ஒளி செய்திகள் அடங்கிய சிறிய தொடர்கள், அதோடு கமிங் டு கிரிப்ஸ் வித் யுவர் செக்சுவல் பாஸ்ட். இறுதியாக, நான் பரிந்துரைப்பது சார்லஸ் ஸ்டேன்லியின் புத்தகங்கள், தி கிப்ட் ஆப் பர்கிவ்னஸ், மற்றும் சோதிக்கப்படுதல் பற்றிய புத்தகம்.

நா உங்களுக்கு முதல்ல சொன்ன குறிப்பை நிதானித்திடலாம். உங்கள் பாவ பழக்கங்களை நீங்கள் உதறித்தள்ள எதை தெரிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்? சுருக்கமா சொன்னா, நீங்க மன்னிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறார், நீங்க அவருடைய பிள்ளை, உங்கள் வாழ்வை வளமாக்க அவர் தமது பரிசுத்த ஆவியை உங்களுக்கு தந்திருக்கிறார்.

இப்ப கற்பனை செய்துபாருங்க நீங்க நீங்க குறுகலான வீதியின ஒரு முனையில் நிற்கிறீர்கள், அதின் இரண்டு பக்கத்திலும் வீடுகள் இருக்கிறது, பிலதெல்பியா நியூயார்க் நகரத்திலுள்ள வீடுகள் போலிருக்கிறது, ஒன்றுக்குஒன்று அருகிலிருக்கும், சாலையை ஒட்டினமாதிரி இருக்கும் முன்னாடி புல்தரை இருக்காது அதில் இரண்டு மாடிகள் இருக்கிறது. இந்த வீதியை பார்க்கும்போது, அடுத்த முனையில் இயேசு கிறிஸ்து நின்றுகொண்டிருக்கிறார். இதை

நினைவில் கொள்ளுங்கள் உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இந்த நீண்ட தெருவில் நடப்பதற்கு ஒப்பாயிருகிறது, இந்த தெரு அவருக்கு சொந்தமானது. இயேசு சொல்கிறார் அவரிடத்திற்கு நீங்கள் வருவதற்கு தடியாக இந்த வீதியில் உங்களுக்கு முன்பு எதுவுமே இல்லை. உங்கள் விசுவாசத்தை கிறிஸ்துவின் மீதுவைத்து அவரை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டால், உங்கள் கண்களை இயேசுவின் மீது பதியவைத்து நடக்க துவங்கிடுங்கள்.

ஆனா வேதம் இன்னொன்றையும் சொல்கிறது இந்த உலகம் முழுவதும் இப்பிரபஞ்சத்தின் தேவனாக இருக்கும் சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது. அதனால இந்த வீதிகளின் இருபுறங்களிலும் இருக்கிறவர்கள் சாத்தானுக்காக வேலைசெய்து இயேசுவை நோக்கி செல்லும் உங்கள் இலட்சியத்திலிருந்து உங்களை வழிவிலக செய்ய அற்பணிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உங்கள் பாதையில் தடையாயிருப்பதற்கும் உங்கள் நடையை நிதானப்படுத்துவதற்கும் எந்த அதிகாரமும் வல்லமையும் இல்லை. நீங்கள் கடந்துபோகிறபோது தங்கள் வீட்டின் ஜன்னல் வழியாக உங்களை கூப்பிட முடியும் அவ்வளவுதான். அப்படிசெய்து, உங்கள் கவனத்தை ஈர்த்து இயேசுவின் மீதுள்ள உங்கள் பார்வையை திசைதிருப்ப முடியுமென நம்புகிறது. சாத்தானின் சேனை உங்கள் முன்னேற்றத்தில் இடையூறு விளைவிக்க நினைக்கின்றன.

உங்களை உங்கள் பாதையிலிருந்து திசைதிருப்ப பயன்படுத்தும் முறை உங்களை கூப்பிட்டு, “ஹேய், இந்த பக்கம் பாரு. உனக்கு தேவையானது என்னிடம் இருக்கிறது, இது நல்லா இருக்கும், சுவையாக இருக்கும், அற்புதமா இருக்கும், வீதியில் நடந்து போவதை காட்டிலும் இது சுவாரஸ்யமாக இருக்கும். இந்த பக்கம் வா, உள்ள வா, இதை முயற்சி செய்திடு என்றிடும்.” அதுதான் சோதனை. சாத்தானின் ஆவியை உடைய இவர்கள் நீங்கள் தேவனை பிரியப்படுத்தாமல் உங்களை பிரியப்படுத்திகொள்ளும் வழியை சொல்கிறார்கள்.

அல்லது, நீங்க கிறிஸ்துவை நோக்கி நடந்துகொண்டிருக்கும்போது, கடுமையான விமர்சனங்களை உங்கள் பெற்றோர் நண்பர்கள் அல்லது சமுதாயத்திர் மூலம் பரவ செய்திடும். அல்லது நீங்க வளர்ந்து வருகிற நேரத்தில், எண்ணங்கள் மாறிடும், “நீ ஒரு முட்டாள். அசிங்கமாயிருக்க. தேவனுக்கு எந்த விதத்திலும் பிரயோஜனப்பட மாட்ட. நீ அதிக பாவம் செய்திருக்க என்று தோன்றும்.” சாத்தானின் சேனையினர் உங்கள் மனதில் குற்ற உணர்வை உண்டாக்குவதில் வல்லவர்கள், அலது உங்களை குறித்த தவறான கருத்தை சொல்லி உங்களை வேதனையடைய செய்யும். நீங்க உங்களை சோதனைக்கு உட்படுத்தி பாவம் செய்தால் அது சாத்தானின் வல்லமையை இன்னும் அதிகரித்திடும். யாக்கோபு நாம் பாவம் செய்வதற்கான காரணத்தை கூறுகிறார். ஒரு கேள்வியை கேட்கிறார், “உங்களுக்குள் யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது? உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா? நீங்கள் இச்சித்தும் உங்களுக்கு கிடைக்கவில்லை...விண்ணப்பம்பண்ணுகிறீர்கள் ... அது உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று செய்கிறீர்கள்.” (யாக்கோபு 4:1-3). நம்முடைய சுயம் நம்மை பாவம் செய்ய தூண்டும்போது, சாத்தான் அதை நமக்கு எதிராக பயன்படுத்திகொள்வான், “என்ன செய்திருக்கண்ணு பாரு? நீ இப்படி செய்தும் உன்னை எப்படி ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லிகொள்கிறாய்?”

இத்தனை ஆண்டுகளில் தாங்கள் செய்த பாவத்தினால் வெட்கப்பட்டு தற்கொலை செய்துகொண்டு சில கிறிஸ்தவர்களை எனக்கு தெரியும். அந்த பிரச்சனை வெட்கத்திற்கு தப்பித்துகொள்ளும் வழியாக அதைதான் நினைத்துகொள்கிறார்கள். அவர்கள் வாழ்வில் சாத்தான் பொய்யை விதைக்கிறான், இந்த உலகம், பாவம் அவர்களை தோற்க்கடித்துவிட்டது. அவர்கள் உண்மையாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்தால், அவர்கள் பரலோகம் செல்வார்கள். ஆனால் அவர்கள் வாழும் நாட்களில் தேவனுடைய நன்மையை அவர்கள் தவறிவிட்டார்கள்.

கிறிஸ்துவுக்கு நேரான நமது பாதையில் இருந்து நம்மை விளக்கிட சாத்தான் உபயோகிக்கும் மிகப்பெரிய ஆயுதம் குற்றப்படுத்துதல் தான்.

வேதம் தெளிவாக போதிக்கிறது, “கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துகொல்லுங்கள். ஏனென்னில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு.” (எபேசியர் 6:10-12)

இன்றைக்கு ஒரு கிறிஸ்தவராக நீங்கள் நினைக்கலாம், “நான் முக்கியமல்ல, நான் சரியானவன் அல்ல, நான் நல்லவன் இல்லை,” உங்களை சுற்றி இருக்கிறவர்களின் குற்றச்சாட்டை கேட்டுகொண்டிருக்கிறீர்கள், உங்களோடு வளர்ந்தவர்கள் சொல்லலாம், சாத்தான் சொல்லலாம், மூன்றுமே இருக்கலாம். ஆனால் நாம் கிறிஸ்தவராகும் போது அந்த குற்றச்சாட்டுகளை தேவன் நம்மை பற்றி சொல்கிறவற்றை வைத்து மாற்றியமைக்கவேண்டும். தேவனுடைய வார்த்தையின்படி, கிறிஸ்துவுக்குள் நமது விசுவாசத்தை வைத்திடும் நொடியில், அவருடனான நித்திய உறவிற்குள்ளாக நாம் நுழைந்துவிடுகிறோம். தேவன் சொல்லுகிறார் கிறிஸ்துவுக்குள் நாம் முக்கியமானவர்கள், தகுதி பெற்றவர்கள், நல்லவர்கள். தேவன் தாமே நம்மை கிறிஸ்துவுக்குள் நிறுத்திய ஸ்தானத்தை சாத்தாம் ஒருபோதும் மாற்றியமைக்க முடியாது. ஆனால் நமது குடும்பம், நமது நண்பர்கள், அல்லது சாத்தானோ நம்மை குழப்பிடும் எண்ணங்களை

சிந்தனைகளை நமக்குள் நுழைத்திடுவான், வெட்க உணர்வை அளித்திடுவான், அது நம்மை மன அழுத்தத்திற்குள்ளாக்கிடும்.

தேவன் நம்மை பற்றி என்ன நினைக்கிறார் என்கிறதான் அவரது வாக்குத்தத்தத்தை அறியாமல் இருந்தால், சாத்தான் எல்லா பொய்களையும் நாம் நம்பும்படி செய்து நம்மை வஞ்சித்திடுவான். அந்த குற்றப்படுத்துதலை ஏற்றுக்கொண்டு தேவனுக்கு பதிலாக அவனது பொய்யை நம்பினால், உங்களுடைய சந்தோஷம் சமாதானம் மற்றும் தேவன் உங்களுக்கு அளித்திடும் விடுதலையை நீங்கள் இழந்திடுவீர்கள்.

மன அழுத்தத்திற்குள் இருக்கும் ஒரு கிறிஸ்தவர் நீல் ஆண்டர்சனுக்கு எழுதிய கடிதத்தை அவருடைய புத்தகத்தில் கூறியிருக்கிறார் அதை கவனியுங்கள். இது உங்கள் உணர்வை வெளிப்படுத்துவதாக இருக்கும். இவர் இப்படியாக எழுதுகிறார்: “எனது பழைய உணர்வுகள் வாழ்க்கையே அர்த்தமற்றது என்கிறது திரும்ப திரும்ப போராட்டம் வருகிறது. எனக்கு பயமாயிருக்கு, தனிமை, குழப்பம் மன உளைச்சலில் இருக்கிறேன். தேவன் இதை மேற்க்கொள்ள செய்வார் என்று ஆழ்மனதில் நினைக்கிறேன், ஆனால் இந்த தடையை மீண்டு வரமுடியல. என்னால ஜெபிக்க முடியல. முயற்சிக்கும்போது, எல்லாம் எனக்கு சாதகமாயிருக்கு. நல்ல உணர்வு உண்டாகும்போது தேவன் என்னிடத்தில் விரும்புகிற காரியத்தை செய்திட முயற்சிக்கிறேன், ஆனா அந்த வல்லமைகளின் சத்தத்தால் அதிகமாக தாக்கப்பட்டு செத்தவனை போல நின்றுவிடுகிறேன். அந்த சத்தத்திற்கு நான் இணங்கிபோகிறேன் என்னால் போராடி மேற்கொள்ள முடியவில்லை. எனக்கு சமாதானம் வேண்டும்.”

இது நீங்களாயிருந்தா, நற்செய்தி என்னவென்றால் நீங்கள் சோர்விலும் தோல்வியிலும் துவண்டு இருப்பதை தேவன் விரும்புவதில்லை. வேதம் சொல்கிறது கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக விசுவாசித்தால், உங்கள் பரலோக பிதா உங்கள் எல்லா பாவங்களையும் அறிந்து உங்களை நித்தியமாக மன்னித்தும் இருக்கிறார். உங்களை குற்றப்படுத்த பிசாசிற்கு அதிகாரம் இல்லை; உங்களை நீங்களே குற்றப்படுத்த கூடாது. நீங்கள் தேவனுக்கு முன்பாக மன்னிக்கப்பட்டு நீதியாக நிருத்தப்படுகிறீர்கள்.

நினைவிருக்கிறதா இரண்டு வாரங்களுக்கு முன்பு நாம் இளைய குமாரனை பற்றிய உவமையை பார்த்தோம். (லூக்கா 15:11-32) இந்த உவமையில் இயேசு பிதாவாகிய தேவன் இந்த கதையில் உள்ள பிதாவைபோல தனது மகன் பாவத்தில் வாழ்ந்து தூரதேசத்திற்கு ஓடிபோனாலும் தொடர்ந்து அவனை நேசிக்கிறது போல நேசிப்பதாக கூறுகிறார். அந்த மகன் திரும்பிவந்தபோது, அந்த தகப்பன் அவனை திட்டி தண்டிக்க வில்லை. அவனை சந்திக்கும்படி ஓடினார், அவனை கட்டி தழுவிக்கொண்டு அவனை வீட்டிற்குள் வரவேற்றார். அவனை முற்றிலும் மன்னித்தார். மகன் அதற்கு தகுதி அல்ல, ஆனாலும் தகப்பன் அவனை நேசித்தார். இப்படிதான் நமது பரலோக பிதாவும் நம்மை நடத்துகிறார். நம்மை நேசிப்பதை நிறுத்த மாட்டார், அவரை விட்டு நாம விலகிபோனாலும் நேசித்துகொண்டே இருப்பார்.

சரி, கடந்த வாரத்தில் நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தையின் அர்த்தத்தை பார்த்தோம். வேதம் கூறுகிறது, “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.” (ரோமர் 5:1)

நினைவிருக்கட்டும், நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தை சட்டபூரவமான அங்கீகாரத்தை குறிக்கிறது. குற்றவாளி குற்றமற்றார் என்று புலப்படும்போது இதே காரியத்தைத்தான் ஒரு நீதிபதி நீதிமன்றத்தில் பிரகடனம் செய்கிறார். நிரபராதி என்பது நீதிமான் என்று கூறுகிறது, அபராதங்களில் இருந்து விடுவிக்கப்படுகிறார். ஒரு நீதிபதியால் நீதிமான் என்று அறிவிக்கப்படாதவன் குற்றவாளியாக கருதப்படுகிறான், அவன் தண்டனைக்குள் தீர்க்கப்படுகிறான். தேவன், நீதியுள்ள நியாயாதிபதி, தமது குமரனில் விசுவாசமுள்ளவர்களாய் தம்மிடத்தில் வரும் பாவியை நீதிமான் என்று அறிவிபதாக வாக்குபண்ணுகிறார்.

தேவன் இந்த ஈவை நமக்கு இலவசமாக அளித்திருந்தாலும் அவருக்கு பெரிய பாதிப்பை உண்டாக்கினது. அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறார், “கிறிஸ்து நம்மை தேவனுடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்.”

வேதம் சொல்கிறது, “இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பை கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்” ரோமர் 3:24. இந்த கிருபை, தகுதியற்ற நிலையின் தயவு, உங்களுக்கும்படி கிடைக்க தேவன் விரும்புகிறார்.

எப்போதாவது நீங்கள் ஒரு பாவிஎன்றும் அவரது குமாரன் உங்களை இரட்சிக்கவேண்டும் என்று தேவனிடம் கேட்டிருகிறீர்களா? எப்போதாவது உங்கள் முழு நம்பிக்கையையும் உங்கள், நித்திய இலக்கையும் இயேசுவின் கரங்களில் கொடுத்திருக்கிறீர்களா? அப்படி செய்யும் நேரத்தில், தேவன் உங்கள் பாவங்களை மன்னித்து நீதிமான் என்று பிரகடனம் செய்வார், நித்தியமாக உங்கள் பாவங்களின் தண்டனையிலிருந்து விடுவித்திடுவார்.

******

ஆனா கிறிஸ்துவை விசுவாசித்த பிறகு பாவத்தில் விழுந்தால் என்ன நடக்கும்? முதலில், தேவன் உங்களுக்கு என்ன செய்வதாக வாக்களித்தார் என்பதை ஞாபகப்படுத்திடுங்கள். உண்மையா சொல்லியிருக்காரு. ஏன்னா கிறிஸ்துவாலதா நீங்க உங்க பரலோக பிதாவிற்கு முன்பாக நித்திய மன்னிப்பை பெற்று நிற்கிறீர்கள். ஆனா அதே சமயத்தில், நீங்க கீழ்ப்படிதல் இல்லாத பாவ வாழ்க்கை வாழ்ந்தால், தேவனோடுள்ள ஐக்கியத்திலிருந்து வெளியேற்றப்படுவீர்கள். ஒரு பக்கம் தேவனுக்கு முன்பாக மன்னிக்கப்பட்டு நீதிமானாக நித்திய பாதுகாப்புடன் இருக்கலாம். இன்னொரு பக்கம் பிதாவின் ஐக்கியத்தை விட்டு விலக்கப்பட்ட அனுபவம் உண்டாயிருக்கும்.

சார்லஸ் ஸ்டேன்லி இதற்கு ஏற்ற ஒரு உதாரணத்தை தனது புத்தகத்தில் கூறுகிறார், தி கிப்ட் ஆப் பர்கிவ்னஸ். உங்களுக்காக அவருடைய உதாரணத்தை மேம்படுத்தி கூறுகிறேன். ஒரு சபையில் பிரசங்கித்துகொண்டிருக்கிறேன் என்று வைத்துகொள்வோம், நா பிரசங்கம் பண்ணிகொண்டிருக்கும்போதும் என் கடிகாரத்தை கழற்றி மேடையில் வைக்கிறேன். அப்புறம் அதை விட்டு விட்டு வெளியேறுகிறேன். மேடைக்கு பிற்புரத்தில் இருந்து என் நண்பர் மேடைக்கு செல்வதை கவனிக்கிறேன், அவன் போய் என் கடிகாரத்தை எடுத்து தனது பாக்கெட்டில் போட்டுகொள்கிறார். எனக்கு ஆச்சரியமா இருக்கு, ஆனா நா அவனை மன்னிக்க முன்வருகிறேன், அவன் என்னுடைய நண்பன். என்னை பொறுத்தவரையில் அவனுடனான எனது உறவில் எந்த விரிசலும் ஏற்படாமல் இருக்கிறது. அவனுடனான என்னுடைய உறவில் மாற்றம் இல்லை, அவன் எனது கடிகாரத்தை திருடியிருந்தாலும் பரவாயில்லை.

உண்மையில், அடுத்த வாரம் நா அவனை பார்க்குபோது, நா நிச்சயம் அவனிடம், “ஹே, ஏ கடிகாரத்தை திருடீட்டன்னு சொல்லமாட்டே.” அவனை அன்போடு வரவேற்று அவனிடம் விசாரிப்பேன், “ நீ எப்படி இருக்க?” எனக்குள்ள மன்னியாமையின் ஆவியை சுமக்கவில்லை. எனக்குள்ள கசப்போ வெறுப்போ கிடையாது. ஆனா நாங்க சந்திக்கும்போது, அவன் உணர்வு எப்படி இருக்கும்? அவன் குற்ற உணர்வடைவான், வெட்கப்பட்டு கூனி குருகிடுவான். அவனுடைய மனசாட்சி அவனை குத்தும், எங்கூட இருப்பதுல அசவுகரியமா இருப்பான். அவனுடைய மனசாட்சியை அவன் சரிசெய்துகொள்ள ஒரே வழி என்னுடைய கடிகாரத்தை திருடியதாக அறிக்கை செய்து மன்னிக்கும்படி கேட்பதுதான். அப்படி செய்தால், என்னுடைய பதில், “ஏற்க்கனவே மன்னிக்கப்பட்டாய் என்பதாகும். என் கடிகாரத்தை நீ எடுப்பதை பார்த்தபோதே உன்னை மன்னித்துவிட்டேன்.” வேறுவிதமா சொன்னா, மன்னிப்பை பெறும்படி என் நண்பன் என்னிடம் வர அவசியமில்லை, அவனை ஏற்க்கனவே மன்னித்துவிட்டேன். அவனுடைய மனசாட்சியை சுத்தம் செய்ய அவன் அறிக்கை செய்யவேண்டியது அவசியம் அதினால் என்னுடனான அவனது உறவை புதுப்பித்துகொள்வான்.

இதைப்போலவே, நாமும் நம்முடைய பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்யும்போதும் நடக்கிறது. நம்முடைய அறிக்கை தேவனை நம்மை மன்னிக்கும்படி நடத்துவதில்லை. நம்முடைய விசுவாசத்தை கிறிஸ்துவின் மீது வைத்த போதே அதை செய்துவிட்டார் ஏன்னா அது கிறிஸ்துவின் சிலுவையினால் வந்தது. இருந்தாலும், நமது பாவ அறிக்கைகள் அவருடனான ஆதிநிலையின் உறவிற்குள் பிதாவோடு மீண்டும் ஐக்கியப்படும்படி புதுப்பிக்கிறது. தேவன் ஒருபோதும் மாறாதவர். நம்முடைய பாவங்களினால் அவர் நம்மைவிட்டு முகத்தை திருப்பிகொள்வதில்லை.

நினைவிருக்கட்டும், நீங்க பண்ணப்போகிற பாவங்களை குறித்தும் தேவனுக்கு ஏற்க்கனவே தெரியும், அதற்கான விலையையும் ஏற்க்கனவே இயேசுவும் சிலுவையில் செலுத்திவிட்டார். தேவனுடைய பிரதியுத்தரம் எப்போதும் ஒரேமாதிரி தான் இருக்கும்; மன்னிக்கப்பட்டாய்” அதனாலதான் பாவ பழக்கங்களை விட்டுவிடவும், தேவனோடு சமாதானமாய் சந்தோசமாக இருக்கவும், முதலில் அவருடனான உங்கள் உறவை பற்றி சொல்லப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களை கவனியுங்கள், தேவன் உங்களை கிறிஸ்துவுக்குள் நிறுத்தியிருக்கிறார் என்பதற்கு என்ன அர்த்தம்.

2 கொரிந்தியர் 5:17ன்படி, “ஆகையால், ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, இதோ, இப்போது எல்லாம் புதிதாயின;” யோவான் 1:12ன்படி நீங்கள் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள்; யோவான் 15:15ன்படி நீங்கள் கிறிஸ்துவின் சிநேகிதர். ரோமர் 5:1ன்படி நீங்கள் நீதிமானாக்கப்பட்டிருக்கிறீர்கள்; எபேசியர் 1:ன்படி நீங்கள் பரிசுத்தவான். எபேசியர் 1:5ன்படி நீங்கள் தேவ பிள்ளைகளாக தத்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். எபேசியர் 2:18ன்படி பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவனோடு நேரடியாக பேச கூடியவர்கள். நீங்கள் மீட்கப்பட்டிருக்கிறீர்கள், அதாவது கொலோசெயர் 1:14ன்படி இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவ மன்னிப்பாகிய மீட்டு நமக்கு உண்டாயிருக்கிறது. ரோமர் 8:1-2ன்படி நீங்கள் பாதுகாப்போடும், ஆக்கினையினின்று விடுவிக்கப்பட்டும் இருக்கிறீர்கள்.

பிலிப்பியர் 3:20ன்படி தேவன் உங்களை பரலோக பிரஜையாகவே பார்க்கிறார். 1 யோவான் 5:18 ன்படி நீங்கள் தேவனால் பிறந்திருக்கிறீர்கள் பொல்லாங்கன் உங்களை தொடுவதில்லை. எபேசியர் 2:6ன்படி நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உன்னதங்களில் வீற்றிருக்கிறீர்கள். எபேசியர் 3:12ன்படி நீங்கள் விடுதலையோடு தைரியத்தோடும் பிதாவின் சந்நிதியில் வந்து நிற்க முடியும். இயேசு கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு அளித்திருக்கும் ஸ்தானத்தை எடுத்து சொல்லும் சில காரியங்களாய் இருக்கிறது. அவரே உங்களுக்கு இந்த ஸ்தானத்தை கொடுத்திருக்கிறார், நீங்க தகுதியானவர் என்பதனால் அல்ல, அவருடைய கிருபையினால் பெற்றிருக்கிறீர்கள்.

சரி இப்ப, மறுபடியும் அந்த வீதியில் நடக்கும் கதையை பார்க்கலாமா. நீங்க பெற்றோரின் குற்றச்சாட்டுகளை கேட்கலாம், நண்பர்கள் உலகம் சொல்லலாம். நீங்க நல்லத கேட்கலாம், சோர்வான, சாத்தானின் குற்றச்சாட்டுகள் அவனுடைய ஊழியர்கள் ஜன்னல்களின் உட்புறத்தில் நின்று பேசுவதை கேட்கலாம். சாத்தான் உங்கள் மனதில் குற்ற உணர்வுகளை உண்டாக்குவான், அலல்து உங்களுடைய பிரம்மை என்று நீங்கள் புரிந்துகொள்ளும்வரை மற்றவர்கள் சொல்லுகிறார்கள் என்று தவறான கருத்தை சொல்லுவான், இதெல்லாம் உண்மையாக நடக்கிறது. அந்த எண்ணங்களை எப்படி மேற்கொள்வீர்கள்? உங்கள் பாவங்களை குறித்த சாத்தானின் குற்றசாட்டுகளை எப்படி தோற்க்கடிப்பீர்கள்? நம்மை குறித்த தேவ வாக்குத்தத்தங்களை அறிந்து அதை நம்புவதன் மூலம் தோற்கடிக்கலாம். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதை போல செய்திடலாம், “எல்லா எண்ணங்களிலும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய சிறைபடுத்துகிறேன்.” 2 கொரிந்தியர் 10:5

எப்படி எல்லா எண்ணங்களை சிறைபிடித்து கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய பண்ண முடியும்? நீங்க தேவனுக்காக வாழ முயற்சிக்கையில்  திடீரென்று நீங்க குற்ற உணர்வடைகிறீர்கள், தகுதியில்லை, முட்டாள்; நீங்க ஒருவேளை, “இப்படி செய்தா நா எப்படிப்பட்ட கிறிஸ்தவனாக இருக்கிறேன் என்று நினைக்கலாம்? தேவன் என்னை நேசிக்க முடியாது! ஒரு நிமிஷம் பொறுங்கள்! அந்த சிந்தனையை சிறைபிடிங்க. தேவ வார்த்தையோடு அதை ஒப்பிட்டு பாருங்க. அந்த எண்ணம் தேவன் உங்களை பற்றி சொல்லியவற்றோடு ஒத்திருக்கிறதா?

நினைவிருக்கட்டும், வேதாகமத்தை பொறுத்தவரை, தேவனுடைய நீதிமன்றத்தில், சட்டபூர்வமாக உங்கள் விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவின் மீது வைத்து அவர் உங்களுக்காக சிலுவையில் செய்ததை நம்பின பிறகு நீங்கள் குற்றவாளி அல்ல. உங்கள் பாவங்களுக்கான ஆக்கினைக்கு நீங்கள் உட்பட்டவர்கள் அல்ல. நீங்க அபாத்திரவானல்ல நீங்க மூடனோ முட்டாளோ இல்லை. நீங்க தவறாக குற்றம் சாட்டப்பட்டு உண்மையில்லாத ஒன்றை நம்பிகொண்டிருக்கிறீர்கள்! நீங்க போராடும்படி தேவன் விரும்புகிறார், தவறான சிந்தனையை சிறைபிடித்து தேவனுடைய சத்தியத்தினால் அதை நிரப்பிடுங்கள். அதற்கு பிறகு நீங்க கிறிஸ்துவை நோக்கி சந்தோஷமாக அந்த வீதியில் நடக்க துவங்கிடுங்கள்.

முதலாவதாக, ஒன்றை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்: குறிப்பாக, கிறிஸ்துவுக்குள் உங்களுடைய ஸ்தானம், இரண்டாவதாக நீங்கள் செயல்படவேண்டும்; சாத்தானையும் அவன் பொய்களையும் எதிர்த்திட வேண்டும். அநேக கிறிஸ்தவர்கள் ஒரே விதத்தை பின்பற்றுகிறார்கள். அவங்க பாவம் செய்றாங்க, பிறகு அதை தேவனிடம் அறிக்கை செய்கிறார்கள்; அப்பறம் மறுபடியும் பாவம் செய்து தேவனிடம் மறுபடியும் அறிக்கை செய்கிறார்கள். பிறகு, மறுபடியுமா பாவம் செய்து, அறிக்கை செய்றாங்க அப்பறம் அதை விட்டுவிடுகிறார்கள். நீங்க அப்படியா? என்ன நடக்குது? ஏன் முன்னேற்றமே இல்லை? காரணம் இங்கிருக்கிறது. நீங்க வாசல் கதவை திறந்து வைத்திருந்தா பக்கத்து வீட்டு நாய் உங்க வீட்டுக்குள்ள புகிந்திடும். அந்த நாயினுடைய பற்கள் உங்க காலை பதம்பார்க்கும். அந்த வழியிலிருந்து மீள, உங்களை நீங்களே அடிச்சுக்குவீங்களா இல்ல நாயை அங்கிருந்து துரத்துவீங்களா?

சரி, கிறிஸ்தவர்களாக, பல சமயங்களில் பாவம் செய்ய கதவை திறந்து வைக்கிறோம் பிறகு தேவனிடம் மன்னிக்கும்படி கதறுகிறோம். என்ன தெரியுமா? தேவன் நம்மை மன்னிக்கிறார். அவர் சொல்கிறார், “ நம்முடைய பாவங்ளை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிக்க அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்.” (1 யோவான் 1:9) தேவன் நம்மை மன்னிக்கிறார், ஆனால் அந்தவலியும் குற்றஉணர்வும் தொடர்ந்துகொண்டிருந்தால்? நம்மைநாமே குற்றப்படுத்தலாமா, தரையோடு தரையாக தள்ளி மன அழுத்தத்திற்குள் போகலாமா? அந்த நாய் இன்னும் நம்ம தோட்டத்துல இருப்பத எத்தனை தடவை மறந்து போகிறோம்? இன்னும் நம்மை தாக்கிக்கொண்டே இருக்கிறான். அவனை நாம் எதிர்க்க வேண்டும். பாவம் செய்து அறிக்கை செய்வது பதில், தேவ வார்த்தை சொல்கிறது பாவம் செய்தால், பாவத்தை அறிக்கை செய்யணும், மன்னிப்பு கிடைக்கும், ஆனா சாத்தானை எதிர்க்க தொடங்கணும். யாக்கோபு 4:7 இதை செய்யும்படி சொல்கிறது. அவர் சொல்கிறார், “தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள், பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள், அவன் உங்களை விட்டு ஓடிபோவான்.”

நம்மில் சிலர் நம்ம வாழ்க்கையில் தேவனும் நம்மளும் மட்டும்தான் இருக்கிறோம் என்பது போல நடந்துகொள்வோம். அது உண்மையல்ல. தேவன் குழப்பம் மற்றும் மரணத்தின் காரணர் அல்ல, ஆனால் நேர்த்தியான ஜீவனை அளிப்பவர். இன்னொரு பக்கம், வேதம் சொல்கிறது இந்த உலகத்தின் அதிபதியான, சாத்தான், முரட்டாட்ட குணத்தின் பிரதான வடிவமைப்பாளன், பாவம், உறவுகள் உடைக்கப்பட்டு மரணத்தை அளிக்கிறான். யோவான் 8:44ன்படி அவன் பொய்க்கு பிதா. தேவன் தமது பிள்ளைகளை மன்னிக்கிறார், ஆனா நம்மை சாத்தானின் பொய்களை எதிர்க்கும்படி சொல்லுகிறார், பெற்றோரின் பொய்கள், நமக்கு நாமே நம்பும்படி தெரிந்துகொண்ட பொய்கள். நாம இந்த பொய்களை கிறிஸ்துவுக்குள் இருக்கும் நமது ஸ்தானத்தை நிலையை பற்றிய தேவ சாத்தியங்களோடு சேர்த்து நம்புகிறோம். நம்மளால சொல்ல முடியாது, “பிசாசுதா என்னை செய்ய வைத்தான்.” இல்ல. பாவத்தில் விழாமல் இருப்பது நம்முடைய பொறுப்பு, பாவம் என்னை ஆண்டுகொள்ளாமல் இருக்க செய்யறது ஏ வேலை.

வேதம் சொல்கிறது, “நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.” (ரோமர் 6:12) மேலும், வேதம் நமக்கு சொல்லுகிறது, “நீங்கள் உங்கள்

அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாய் பாவத்திற்கு ஒப்புகொடாமல் மாறாக நீங்கள் உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்." (ரோமர் 6:13)

நாம் பாவம் செய்து நமது சரீரத்தை பாவத்திற்கு ஆயுதமாக பயன்படுத்தினால், சாத்தான் நமது வாழ்வில் இடம் பிடித்து, அரனை உண்டாக்கிடுவன். நீங்கள் உங்களை பாவத்திற்கு உட்படுத்தி உங்கள் சரீரத்தை பாவ செயல்களுக்குள் ஈடுபடுத்தியிருந்தால், இந்த செய்கைகளை தேவனிடம் அறிக்கை செய்து பிசாசிற்கு கொடுக்கப்பட்ட எல்லா சட்ட உரிமைகளையும் ரத்து செய்து தேவனுக்கு சொந்தமாக்கிடுங்கள். உங்க வார்த்தையின் மூலம் உங்கள் வாயை பாவத்திற்கு உட்படுத்தினீர்களா? யாரையாவது காயப்படுத்த கைகளை உபயோகித்தீர்களா? தகாத முறையில் யாருடனாவது உடல் உறவில் ஈடுபட்டீர்களா? உங்கள் மனதை ஆபாச காரியங்களை சிந்திக்க இடமளித்தீர்களா, உங்கள் இருதயத்தில் கோபம் பெருமை எரிச்சலுக்கு இடமளித்தீர்களா? தேவன் சொல்கிறார் ஒரு கிறிஸ்தவராக, நாம அப்படி செய்ய கூடாது. அது பாவம் என்கிறார்! அதனால் பாவமாக செய்த காரியங்களை அறிக்கை செய்திடவேண்டும். அறிக்கை செய்தல் என்பது தேவன் எதை பாவம் என்கிறாரோ அது பாவம்தான் என்று நாமும் ஒப்புகொள்கிறோம் என்பதன் அடையாளம். தேவனிடத்தில் உண்மையாயிருந்து அவரோடு மனம்பொருந்தி நடப்பது மிகவும் முக்கியம். ஒருமுறை நம்முடைய நடக்கைக்கும் தேவனுடைய வார்த்தையில் அவருடைய பிள்ளைகளை குறித்து சொல்லப்பட்டிருக்கும் காரியங்களுக்கும் இடையில் பிரச்சனை இருப்பதை கண்டவுடன், உலகத்தோடு ஒத்துபோகாமல், நம்முடைய பாவ சுபாவத்தை அறிக்கை செய்து சரி செய்திட வேண்டும்.

உங்களை நீங்களே வஞ்சித்துகொண்டு உங்கள் பாவ செயல்களை நிராகரித்து ஒதுக்கி சாத்தானின் அரண்கள் பலமாக இடமளித்தால், வாழ்வில் உள்ள பாவ பழக்கங்கள், பெரிய வீழ்ச்சிக்கு நேராக நடத்தி சென்றிடும். ஒருவேளை ஏற்க்கனவே அந்த கட்டத்தில் இருக்கலாம். ஆனா நீங்க ஒரு கிறிஸ்தவராக இருந்தால், சந்தோஷப்படுங்க. தேவனுக்கு உங்க பாவத்தை பற்றி தெரியும் ஏற்க்கனவே உங்களை மன்னித்துவிட்டார். ஆனா அவருடனாக உறவில் இருந்து தள்ளி இருக்கிறீர்கள், அப்படியானால் சமாதானம் இருக்காது, பால பழக்கத்தின் மீதி அதிகாரம் இல்லை, பரிசுத்த ஆவிக்கு முன்பு குற்றமுள்ளவராக உணர்வது உறுதி. அப்படியிருந்தால், தேவனுடைய வார்த்தை உங்களை ஊக்குவிக்கட்டும்.

வேதம் சொல்கிறது யாராவது பாவம் செய்தால், "நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1 யோவான் 2:1)நமது பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. வேறுவிதமா சொன்னால், பாவம் செய்யும்போது, நம்முடைய பாவங்களை அகற்ற இயேசு தாம் சிலுவை செய்த காரியத்தை சொல்லி அவரே பரிந்து பேசுகிறவராக நிற்கிறார். தேவன் அதை ஏற்றுகொள்கிறார். நமது பிதா தொடர்ந்து நம்மை நேசிக்கிறார் ஏற்கனவே நம்மை அவர் மன்னித்துவிட்டார். ஆனா காத்திருக்கிறார், நாம அவரிடம் வந்து பாவத்தை அறிக்கை செய்து அவருடைய சுத்திகரிப்பை பெற்று அவருடனான உறவை புதுபித்திட விரும்புகிறார். அப்படி செய்யலைன்னா, நம்முடைய அன்பின் பரலோக பிதா தமது பிள்ளைகளை அன்போடு சிட்சிப்பதாக வாக்களித்திருக்கிறார்.

வரப்போகிற வாரங்களில் தேவனுடைய சிட்சையை குறித்து நாம் பேச இருக்கிறோம். ஆனால் தேவனோடு சரியான உறவை நாம் கைகொண்டுவந்தால், அவருடைய கடுமையான சிட்சையிலிருந்து நாம் தப்பித்துகொள்வோம். மேலும் கிறிஸ்துவ வாழ்வை உங்கள் சுய பெலத்தால் வாழ முடியாது என்று தேவன் சொல்வதையும் பார்க்க இருக்கிறோம். நமக்கு இல்லாத பெலத்தை நமக்கு தரும்படி தேவன் தமது ஆவியை நமக்கு தந்தருளியிருக்கிறார்.

இன்றைக்கு நாம் பார்த்தவற்றை சுருக்கமாக சொல்கிறேன், பாவ பழக்கங்களை விட்டுவிட, முதலில், தேவன் நமக்குகிறிஸ்துவுக்குள் அளித்திருக்கும் ஸ்தானத்தை பற்றி தேவன் சொல்வதை ஏற்றுக்கொண்டு நம்பவேண்டும். இரண்டாவது, நாம் பாவத்தில் விழுந்தால், பாவ பழக்கத்தை நம்மிடம் வளர்த்திட்டால், தேவனிடம் உண்மையாய் நமது பாவத்தை அறிக்கை செய்யணும், அவர் நம்மை நித்தியமாக மனித்திருக்கிறார் என்று தெரியும், ஆனால் அவருடைய நெருங்கிய உறவும் சுத்திகரிப்பும் நமக்கு அவசியம். அடுத்து, மூன்றாவதாக, தேவனோடு நாம் நடக்க வேண்டும், எல்லா பொய்களையும் குற்றச்சாட்டுகளையும் நிராகரிக்கணும், சாத்தானின் பொய்களும் அதில் அடங்கும்.

இதைதான் நீங்கள் செய்கிறீர்களா? இல்லாவிட்டால், இப்போதே தேவனிடத்தில் உங்கள் பாவங்களை அறிக்கை செய்து கிறிஸ்துவுக்குள் உங்கள் ஸ்தானத்தை பற்றி அவர் சொல்வதை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியின் வல்லமையோடு ஏன் பிசாசிற்கு எதித்து நிற்க கூடாது?

அடுத்த வாரம் நம்முடைய உணர்வுகள் மற்றும் மன அழுத்தத்தை பற்றி தேவ வார்த்தை கூறுவதை பார்த்திடலாம். தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

அடுத்த வார நிகழ்சிகளின் தொகுப்பை காண காத்திருக்கவும்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.